திராவிடநாடு

மலர் 11 | 15—2—53 | இதழ் 33

விலை 2 அணா

மூன்றாவது உலகப்போர் மூளும்?

முதலாளித்துவம் கொட்டும் முரசு

ஐசன்—அளிக்கும் 'அபாயம்'

உலகமெங்கும் திகைப்பு

மாசேதுங்--வீராவேசம்

அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவர், தன்னுடன்கூட இருந்து அரசோச்ச பல முதலாளிகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிறார் என்ற செய்தி கேட்டதுமே, அஞ்சினோம். அந்த அச்சம் வீண்போகவில்லை! ஆட்சிபீடம் ஏறிய முதல் நடவடிக்கையாக, அமெரிக்கத் துருப்புகளை அவிழ்த்துவிட்டிருக்கிறார்.

இரண்டாவது உலகப்போரின் விளைவால் சீர்கேடுற்று, எழுந்திருக்க முடியாமல் உலகம் தவித்துக்கொண்டிருக்கிறது. இந்நிலையில், அமெரிக்க முதலாளித்துவம் மூன்றாவது உலகப்போர் முரசைத் தட்டுகிறது.

"முதலாளித்துவம், மக்களின் நல்வாழ்வைக் குறித்து கவலைப்படாது. அதற்கு வேண்டியதெல்லாம் வருமானம்தான்." என்று உலக முற்போக்காளர்கள் கூறிவருவதை, அமெரிக்கத்தலைவரின் 'அறிவிப்பு' உறுதி செய்கிறது.

ஒண்டிக்கிடக்கும் ஒருவனுக்காக உலகக்கடலை அதிரச்செய்யவிரும்புகிறது—அமெரிக்கா. அதனால், ஆதிக்கக் கரங்களை ஆவலோடு, நீட்டுகிறது. பார்மோசாத் தீவில் பதுங்கிக்கிடந்த சியாங்—கேய்—ஷேக்குக்காக, செஞ்சீனாவைத் தாக்கத் திட்டமிடுகிறது.

உலகம் திகிலோடு பார்க்கிறது! ஆனால், ஆதிபத்ய வல்லரசுகளோ, ஆவல்கொண்ட 'ஓநாய்'களாக நிற்கின்றன!!

சின்னஞ் சிறுதீவு, பார்மோசா! மூர்க்கத்தனம் முறிக்கப்பட்டு,முதுகெலும்பு அற்றவனாக, ஆக்கப்பட்ட சியாங்கேய் ஷேக் அடைக்கலம் புகுந்து இருந்தார் அங்கு!!

வெற்றிமாலை சூடிய மாசே-துங், செஞ்சீனாவின் தலைவரானார். கண்முன் நடைபெற்ற காட்சி! எனினும் அமெரிக்க ஏகாதிபத்யம், ஒப்புக்கொள்ளவில்லை, இதனை. உறுமிற்று—'தேசியசீனா'வின் தலைவர் என்று சியாங்கேய் ஷேக்கை வர்ணித்தது.

சீறிடும் சிம்மம்போல இருந்தனர் செஞ்சீனத்து மக்கள்! 'பார்மோசா' புகுந்த சியாங்கும், தனது பதட்டத்தைவிடவில்லை! செஞ்சீனாமீது, தன்ஆவேசத்தைக் காட்டத் துடிதுடித்தார்.

செஞ்சீனாவின் பலம் மகத்தானது! 'சியாங்'கின் சக்தியோ, கடுகளவு!!—இரண்டும் மோத நேர்ந்தால், சியாங்' இருந்த இடம் தெரியாமல் போக நேரிடும். இதனை, முன்னாள் அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் நன்றாக உணர்ந்தார். அதனால், ஓர் அமெரிக்கக் கடற்படையொன்றை பசிபிக் நீரில் உலவவிட்டார்! 'ஏன், இது?'—என்று குமுறினர், செஞ்சீனத்தார். 'உங்களை, சியாங் தாக்காமல், பார்த்துக்கொள்ள!'—என்று பதிலளித்தது, ட்ரூமன் சர்க்கார். உலக வல்லரசுகள் அமெரிக்காவின் நல்லெண்ணம் குறித்து 'அந்தாதி' பாடினர். ஆனால், அமெரிக்காவின் ஏற்பாடு, வலுவிழந்த சியாங்கைப் பாதுகாக்கவே. என்பதை யுணர்ந்தோர், மிகச் சிலர்தாம். சந்தர்ப்பம் பார்த்துக் கிடந்தது அமெரிக்கா! உலகின் சாபத்துக்கு அஞ்சிக் கிடந்தார், ட்ரூமன்!!

ஆனால், போர்க்களத்தில் காலத்தைக் கழித்த ஐசன், பட்டத்துக்கு வந்ததும், தன் பராக்கிரமத்தைக் காட்ட, ட்ரூமன் நிறுத்தியிருந்த படைகளை 'வாபஸ் பெற்றார்! வாபஸ்!—என்றால், 'எல்லோரும் அமெரிக்காவுக்குத் திரும்பி வாருங்கள்,' என்பதல்ல; சியாங், செஞ்சீனாவைத் தாக்கினால், அமெரிக்கப் படை தடுக்காது — என்பதுதான், அந்த 'வாபஸ் உத்திரவு!'

'சியாங்! மோது, செஞ்சீனாவை!'

'செஞ்சீனாவே, புறப்படு, போருக்கு!!'

—இதுதான் ஐசனின் அறிக்கை. இந்த அறிக்கை பிறந்த மறுநாளே, உயர்தர அமெரிக்க ராணுவ அதிகாரியொருவர், பார்மோசாத் தீவு சென்று, சியாங்குடன் கலந்தாலோசித்து இருக்கிறார். சியாங்கும், போர் முழக்கம், செய்திருக்கிறார்! இந்தப் புதுநிலையைக் கண்ட செஞ்சீனத் தலைவர் மா-சே-துங் மார்தட்டியிருக்கிறார், "அமெரிக்க ஏகாதிபத்யத்துக்கு மரணக்குழி வெட்டும்வரை போராடுவோம்" என்று.

பசிபிக்நீர், குண்டு முழக்கங்களால் கலங்கப் போகிறது! ஆசியாவின் பகுதியில் அடுத்த உலகப்போர் ஆரம்பமாகிறது!!—என ஏடுகள் யாவும், வர்ணிக்கின்றன; வருந்துகின்றன.

திரைக்குப்பின்...!

வளர்ந்துவரும்பொதுவுடைமைக் கொள்கையை ஒழிப்பதில், அமெரிக்காவுக்கு, ஆதி முதல் அக்கறையிருந்து வருகிறது. கடந்த உலகப்போர் முடிந்த நாள் முதல், இந்த ஆசையை வளர்ப்பதிலும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதையுமே தனது, முக்கிய நோக்கமாக கொண்டிருப்பதை, உலகு அறியும். அதிலும், பிற்போக்குவாதிகள் எனக் கருதப்படும் குடியரசுக் கட்சியினர், அமெரிக்காவின் செங்கோலை ஏந்திியிருக்கின்றனர். "80 கோடி கம்யூனிஸ்டுகள் நமக்கு எதிரிகள். அதைத் தடுப்பதே எமது முக்கிய வேலை" என்று அமெரிக்க ராஜாங்க மந்திரி டல்லஸ் அறிவித்தார். அவ்விதம் வெளியிட்டவர், ஐசன் அறிக்கை வெளியானதும், ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்—அவைகளின் ஒத்துழைப்பைப் பெற.

ஒத்துழைப்பு.

மார்ஷல் திட்டம், பிற்போக்கு நாடுகளுக்கு உதவி—என்பன போன்ற திரைகள் மூலம் பல நாடுகளைத் தனது வலையில் வீழ்த்த அமெரிக்கா செய்த 'முயற்சிகளை நாம் அறிவோம். டாலர் மோகினியால் பல நாடுகளை மயக்கியும் வைத்திருக்கிறது, அமெரிக்கா! இவ்விதம் கம்யூனிச நாடுகளை எதிர்க்க, அது திட்டமிட்டு செய்த சதியின் விளைவாக,

வட அட்லாண்டிக் உடன்பாடு (NATO)

ஐரோப்பிய பாதுகாப்பு ஸ்தாபனம் (European Defence Community)

மத்ய கிழக்கு பாதுகாப்பு ஸ்தாபனம் (Middle East Defence Organisation)

ஆகிய பல தளங்களைத் தயார் செய்துகொண்டே வந்திருக்கிறது. இந்த ஸ்தாபனங்களில் பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், ஹாலந்து முதலிய பல நாடுகள் உள்ளன. பாகிஸ்தான், பாரசீகம், இந்தியா போன்றவைகளைச் சேர்க்கவும் வலைவீசப்பட்டு வருகிறது. மலேயா, இந்தோசீனா, ஹாங்காங் முதலியவைகளைச் சேர்த்து 'தென்கிழக்கு ஆசிய பாதுகாப்பு ஸ்தாபனம்' (South East Asian Defence Treaty) ஒன்றை அமைக்கும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

புயல் நிவாரண நிதி

ரூ. 20303—15—8

[இதுவரை]

	ரூ. அ. பை
முன் கணக்குப்படி	19579-10-11
தி. மு. கழகம் 14-வது வட்டம் (சென்னை)	81-10—3
தி. மு. க. 31-வது வட்டம் (சென்னை) (602 ஆடைகள் உட்பட)	114—0—0
நிலக்கோட்டை நடராசன்	3—0—0
பாகாலா வட்ட தென்னிந்தியரயில்வே தோழர்கள் சிங்காரவேல் மூலம் (ஆந்திரா)	58—5—0
குளித்தலை சம்பத்	2—0—0
பெரியமருதூர் முருகன்	2—0—0
திருமங்கலம் பெரியசாமி	5—0—0
நெல்லை குளத்தூர் தி. மு. க.	10—0—0
சேலம் அம்மாபேட்டை தி. மு. க.	3—3—0
பெங்களூர் கண்டோன்மெண்ட் மோட்டார் தொழிலாளர்கள் ஏசுதாஸ் மூலம்	15-12—0
பொரிச்சான்பாளையம் சிதம்பரனார் மன்றம்	2—4—0
கோவிந்தசாமி, ஆனந்தன்	2—0—0
இடுமத்தூர் தி. மு. க. சிவானந்தம்	1—0—0
முத்துபேட்டை கருணாதாசன்	1—0—0
கோவை பெரியசாமி	1—0—0
திருவாரூர் மீனாட்சி	5—0—0
தெருவில ரிப்பன் விற்கும் எட்டயகோட்டை இளைஞர்கள் சக்கிரியா மூலம்	5—7—0
சென்னை 33-வது வட்டக்கிளை	30—5—0
பாப்பாநூர் ஜகதேவிக்-கழகம்	10—0—0
மீர்சாகிப்பேட்டை தி. மு. க. சென்னை	66—6—6
பி. சுந்தரநாடார் மதுரை	5—0—0
விருதுநகரில் கருணாநிதி—சிவாஜி கணேசன் கூட்டத்தில் கட்டண வசூலில் மிச்சம்	300—0—0
	20303—15—8

மு. கருணாநிதி
நிதிக்குழு செயலாளர்
தி. மு. க.

புயல் நிதி

மார்ச்சுக்குள் முடிவுறும்

புயல் நிவாரண நிதி வசூலை, மார்ச்சுமாத கடைசி வாரத்துக்குள் முடித்துவிடலாமென்று மேற்படி குழு முடிவு செய்திருக்கிறது. ஆகவே, வெளியூர்களில் இது சம்பந்தமாக வசூலான தொகைகளை,தோழர் மு. கருணாநிதி முகவரிக்கு அனுப்பியுதவக் கோருகிறோம். புயல் நிவாரண நிதிக்காக வெளியூர்களில் பல இடங்களில் 'ஹால' கூட்டங்களும், கலைநிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பலர் எழுதுகின்றனர். அத்தகைய ஏற்பாடுகளைத் தலைமைக் கழகத்தாருக்கு அறிவித்து, பிறகே நடத்தவேண்டுமென்பதைக் கவனமூட்டுகிறோம்.

கே. எ. மதியழகன்,
பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமைநிலையம்,
இராயபுரம், சென்னை.

திராவிடநாடு

காஞ்சி] 15—2—53 [ஞாயிறு

டில்லிக் கொலு

சுயராஜ்யம் எப்படியிருக்கும்? என்று கேட்டபோதெல்லாம், இன்பம் கொஞ்சும் — அன்பு அரசோச்சும்—நம்மவர் 'ஆள்வர்' என்று அழகழகாக வர்ணித்தனர், தேசிய நண்பர்கள்! பாரதமாதாவைப் போட்டு, பல தலைவர்களைச் சித்தரித்துக் காட்டினோர் உண்டு—பாடல் புனைந்தோர், பலர். அந்தப் பழைய காட்சிகளை, இப்போது கவனப்படுத்திக் கொண்டால், அப்பப்பா! எத்தனை எத்தனை விசித்திரமான பதில்கள் — கேலிக் குரலில், கண்டனத் தொனியில் கிடைத்தது. பதில் கூற ஓடி வந்தோரின் கும்பல்தான் எவ்வளவு பெரியது!

சுயராஜ்யபீடம் அலங்கரிக்கப்பட்ட இந்த ஐந்து ஆண்டுகளில், கும்பல் குறைந்ததுமட்டுமல்ல; சுயராஜ்யபீடத்தின் சிறப்பை வர்ணித்தோரும் 'தேய் பிறை'யாகிவிட்டனர்,

"மக்களின் தொண்டர் ஆட்சி நடத்துவர் — மதோன்மத்த நிலை இருக்காது அப்போது" என்றனர். ஜனநாயக யுகமல்லவா, அப்படித்தான் இருக்கவேண்டும், என்றோம்; எதிர்பார்த்தோம். நடக்கிறது, மக்களின் தொண்டர்களது ஆட்சி. ஆனால், மக்களின் முதல் தலைவர் ஸ்தானத்திலிருக்கும் பாபு ராஜேந்திரர் — படாடோபமில்லாதவர் — பார்லிமெண்டுக் கூட்டங்களை ஆரம்பித்துவைத்துப் பேசும்போது, செய்யும் பிரசங்கத்தைப் படித்தால், பலப்பல எண்ணத் தூண்டுகிறது. பார்லிமெண்டு கூடும்போது, நாட்டின் ஜனாதிபதி, இவ்விதம் பிரசங்கம் செய்யவேண்டும்—என்பது அரசியல் ஷாத்து. ஆகவேதான், அழைத்துவரப்படுகிறார், அலங்காரமான வண்டியில்! "ராஜாதி ராஜ, ராஜமார்த்தாண்ட ராஜகம்பீர......" என்று, அரசன் வருமுன், கட்டியக்காரன் கூவுவானாம். அந்தக் கூவுதல் ஒன்றுதான் குறைச்சல்! ஆனால், அப்போது காணப்படும் ஆடம்பரங்களில் எதுவும் குறைவில்லாமல், அலங்காரமாக அழைத்துவரப்பட்டு, சபையாசனத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார். இவ்வளவு ஆடம்பரத்தை பாபு ராஜேந்திரர், விரும்பியிருக்கமாட்டார்! ஆனால், 'ஜனாதிபதி' ராசேந்திரர், இவைகளை அனுபவிக்கத்தான்வேண்டும்! ஏனெனில், இது சுயராஜ்யக்கொலு!!

பாபு ராஜேந்திரர் அழைத்துவரப்படுவதும், அலங்காரமான ஆசனத்தில் அமர்த்தப்படுவதும்கூட விசேஷமல்ல; அதைவிட மற்றோர் முக்கிய விஷயத்தையும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. முன் காலத்திலே, மணிமுடி தரித்த மன்னாதி மன்னர்களுக்கெனத் தனியான நந்தவனம் இருக்குமாம் — நீராழி மண்டபம் இருக்குமாம். நந்தவனத்தில் அவரைத்தவிர, பிறர் நுழைந்தால், தலை போகுமாம்! அது, அந்தக்கால அரசாதர்பாரில். அதைப்போலக்கு, இப்போதும்! எங்கு? 'ராஷ்டிரபவனத்திலே'—ஜனாதிபதி குடியிருக்கும் இடத்தின் பெயர் அது! அந்த 'பவனத்து' நந்தவனத்தை மக்கள் காணும்படியாக, குறிப்பிட்ட காலத்திற்கு, திறந்துவைக்கும்படி 'விசேட' உத்திரவு பிறப்பித்திருக்கிறாராம், ஜனாதிபதி! அந்தத்தோட்டங்களை, ஏராளமானோர் வந்து பார்வையிட்டுத் திரும்புகிறார்களாம் —வந்து செல்லுவோர் செடிகொடிகளைச் சேதப்படுத்தாமல், கண்காணிப்பாளர்கள் கவனித்துக் கொள்கிறார்களாம். அவுரங்கசீப் காலமல்ல! அழகிக்கு தாஜ்மஹால் கட்டியவனல்ல அரசோச்சுவது! மன்னனல்ல — மக்களின் தலைவர். அவருக்கே, இதுவெல்லாம், பிடிக்காது. ஆனால், இத்தனை ஆடம்பரங்களும், அமுவசியமாகக் குவிக்கப்படுகின்றன.

ஆடம்பரமான வாழ்க்கை! அநாவசியமான ஆர்ப்பாட்டங்கள்!! — குவிக்கப்படுவது மட்டுமல்ல, அவர் ஆற்றும் பிரசங்கத்திலும் 'ராஜமிடுக்கு' குறையாமல், பேச்சு தயார் செய்யப்படுகிறது — ஜனாதிபதியின் பேச்சு, தயாரிசெய்யப்படுவதுதான். அந்த 'ஆசை'யின் விளைவாகத்தான் அவர் பிரசங்கத்தில், அடிக்கடி 'என் சர்க்கார்' 'என்னுடைய அரசாங்கம்', என்ற வார்த்தைகள் தொனிக்கின்றன பாபு, ராஜேந்திரரின் பிசகல்ல இது! அவர் அப்படித்தான் பேசவேண்டுமாம்!! சுயராஜ்ய பீடத்தின், புதியமவுசு, இது. இந்த பீடத்தில், நேற்று தடியடி தாங்கிய தியாகிகள், அமர்வதும் அரசோச்சுவதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

அரசு, ஆளழகனுக்கே ஏற்றது! சிம்மாசனம் அரசபரம்பரையின் வாரிசு! மணிமுடிதரிக்க — மார்பு அகலம் 36-இஞ்சு, உயரம் ஆறடி இருக்கவேண்டும்! ராஜகம்பீரம் தேவை — ரதகஜ சவாரி தெரிய வேண்டும்!—என்று, கூறும் கூட்டத்தவரல்ல, நாம். மணிமுடிகள் அமர்ந்திருந்த இடங்களில் மக்களின் தலைவர்கள் வீற்றிருப்பதை, விழியாரக் காண விரும்புவோர்தாம், நாம்! ஆனால், அந்த 'பீடத்தில்' அமர்கிறார் என்பதற்காக, 'ராஜநடை' போடத்தான் வேண்டுமா? தியாகம் புரிந்ததால், காலிழந்தவனும், காவலனாக நேரலாம்! 'அரசு பீடம் ஏற, போடு ராஜநடை' என்று, கூறமுடியும்? எப்படி இயலும், இது! இந்த உண்மையை உணரத் தவறினரோ, அல்லது இதுதான் 'டில்லியில் நடந்த வழக்கம்' என்று, கருதினரோ, அறியோம்! ஆனால், அடிக்கொருமுறை, 'என் சர்க்கார்' என்கிற வார்த்தை, அவரது பிரசங்கத்தில் வந்து வந்து சென்றதாக, அறிகிறோம்!

எலிசபெத் அரசியலார் கூறலாம்! ஹாலந்து ஜூலியானா செப்பலாம்!!- ஆனால், மக்களின் தலைவர், எனிவ்விதம் கூறும்படியான, நிர்ப்பந்தத்திலிருக்க வேண்டும்?

ஜனநாயகம், தனிபொருவர் சொத்து அல்லவே! ஒருவரின் உரிமையென்றால், பிறகு ஜனநாயகத்துக்கு அங்கென்ன வேலை?— ஆனால், "நமது" ஜனாதிபதி, இவ்விதம்தான், பேசவேண்டுமாம்! அந்தப் பொறுப்பிலிருப்போர், அன்னக்காவடியாக அலைய வேண்டும். அரையுடை தரித்திருக்க வேண்டும், பாதசாரியாகத்தான் ஊர் சுற்ற வேண்டும், பாதையோரத்தில் ஒரு குடிசை போதும் அவருக்கு — என்று கூறவில்லை, நாம். அந்தப் பதவிக்குத் தேவையான 'அந்தஸ்து' வேண்டியதுதான்! ஆனால், அது, 'பழைய பரம்பரையிலா,' கொண்டுவிட வேண்டும்?

'முப்பது கோடி மக்களின் முடிசூடா மாணிக்கம்' என்று, வெளியுலகில், பெருமை பேசவும்—படம் எடுத்துக்காட்டி 'பாரீர்! நாங்கள் ஆளும் பூபாகத்தை!!' என்று காட்டிக்கொள்ளவும்தான், இந்த ஆடம்பரங்கள் பயன்படுமே யொழிய, என்ன லாபம் இதனால்?

குதூகலமாக பார்லிமெண்டு ஆரம்பமாகிறது! ஜனாதிபதியும் வந்தார் — பேசினார்! வெளிநாட்டுத் தூதுவர்களும் வீற்றிருந்தார்கள்! எல்லாம், சரி. சுயராஜ்யபீடத்தில், சுதந்திரத் தலைவர் வீற்றிருப்பதும், சரி. பரந்த பூபாகத்தை 'எனது' சர்க்கார் பராமரிக்கிறது என்று, கூறிக்கொள்வதும், சரி. ஆனால், இவ்வித 'பெருமைகளை' அளிக்கும் அந்த பரந்த பூபாகத்தின் நிலைமைகளை விளக்கி பேசவேண்டாமோ, அந்தத் தலைவர்? 'ஜனாதிபதி'யின் பிரசங்கம், சர்க்காரின் நடைமுறைக் கொள்கையை வகுத்துத் தருவதாம்! கூறப்படுகிறது. அவ்விதமானால், அவரது பேச்சில், ஏன், பரந்த பூபாகத்தின் நிலைமைகள் விளக்கப்படவில்லை? 'இந்தியாவின் ஏக தலைவர்!', "அவருக்குக் கீழ் ஒரு அரசாங்கம்!"—என்ற பெருமைகளை ஒப்புக்கொள்வோம். அந்தப் பெருமைகளுக்குமட்டுமா, அவர்? அகில இந்தியாவுக்கும் தன்னுடைய சர்க்கார் செய்திருக்கும் சாதனைகளை விவரித்துரைக்கவும் வேண்டுமே?—உரைத்தாரா, 'நம்ம' தலைவர்! உரைக்கும்படி, தயாரிக்கப்பட்டதா, அவரது பிரசங்கம்? உத்தரப் பிரதேசத்தில 23,800 கிராம அதிகாரிகள் ராஜினமா! கல்கத்தாவில, பாதுகாப்புச்சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்!! — இது போன்ற தகவல்களை, வேண்டுமானால், அவர் விவரிக்க வேண்டாம். வேதனையானவை, அவை!— சாப்பிட வழியில்லாமல் சாகிறார்கள் தெற்கில்!— இதைக்கூட வலியுறுத்த வேண்டாம்; பிறர், கேலிசெய்வர். ஆனால், இன்னின்ன பகுதிகளுக்கு இன்னின்ன உதவி அளிக்கும் 'எனது' சர்க்கார் — என்பதைக் கூடவா, அவர் தெரிவிக்கக்கூடாது!

அகில உலக அரசியலிலே—ஆபிரிக்க நிற வெறித் திமிர்—பாகிஸ்தான் போக்கு—கொரியா தரும் பயம்—குமுறும் யுத்தபீதி—ஆகியவைகளைப் பற்றியெல்லாம், அதிகமாக எடுத்துரைத்த, டில்லி பீடத் தலைவர், குமுறுகின்ற வயிற்றோடு உலவும் தென்னாட்டு உணவுப் பிரச்னையை ஓரிரு வார்த்தைகளின் மூலம், முடித்திருக்கிறார். அதுவும் எப்படி?—"புது நீர் பாசன திட்டங்கள் மூலம் பஞ்சமேற்படாமல் மாகாண சர்க்கார்கள் பார்த்துக் கொள்ளும்," என்பதாக.

ஆனால். திருச்சி — இராமநாதபுரம் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்த மாநில ரெவினியு மந்திரியாரோ, 'நடமாடும் பிணங்களைக் கண்டேன்! பஞ்சத்தால் பரிதவிக்கிறார்கள் மக்கள்!!' என்று செப்புகிறார். "இந்த நிலைமையை மாற்ற முயற்சிக்காவிட்டால் நமது பூமி, ஒரு கஞ்சித்தொட்டி தேசமாகிடும்" என்கிறார், சேலத்தில் கலெக்டராகயிருந்து ஓய்வு பெறும், உயர்தர அதிகாரி. நாமோ, நாள்தோறும் பலலாயிரக் கணக்கான பரிதாப உருவங்களைச் சந்திக்கிறோம்! இந்தச் சிக்கலைப் போக்க 'இன்னது செய்யும் 'எனது' சர்க்கார்,' என்று செப்பவில்லை, தேசத் தலைவர். அதுமட்டுமா? ஐந்துகோடி நாசம்! என்று மதிப்பிட்டுக் கூறுமளவுக்கு கோர விளையாட்டு நடத்திய புயலின் கொடுமை குறித்துச் சின்னஞ்சிறு சொல், சிதறவில்லை, தேசத்தலைவரின் பேச்சில்?

புயல் விளைத்த சேதத்தைவிளக்கி 'விரைவில் உதவுவீர்!' என்று வேண்டுகோள் விடுக்கிறார், காங்கிரசின் முன்னாள் எம். எல். ஏயான வலிவலம் கே. எம். தேசிகர். அவர் ஓர் மிராசுதார்! அவரே, வேதனை கீதம் எழுப்புகிறார் என்றால், புயலின் கொடுமைக்கு ஆட்பட்ட ஏழை எளியவர்களின் கதியைப் பற்றி எவ்விதம் உரைக்கமுடியும்?— ஆனால்,இந்த 'விஷயம்' தேச ஜனாதிபதியின் பேச்சில், இடம் பெறவில்லை! எவ்விதம் இடம் பெறும்? அவர் இருப்பது டில்லி! நாம் இருப்பது சென்னைதானே!! பீகாரில்நடந்திருந்தால், பம்பாயில் ஏற்பட்டிருந்தால், மத்ய மாகாணமாயிருந்திருந்தால், பலப்பல தகவல்கள் தரப்பட்டிருக்கும்—பரிதாபச் செய்தி புறப்பட்டிருக்கும் — பணஉதவி செய்ய வேண்டும் என்கிற பாசமொழி உதிர்ந்திருக்கும். ஆனால், இது சென்னையாச்சே! கவனத்திலிருந்தாலன்றோ, பேச்சில் வரும்? டில்லிக்கும் சென்னைக்கும் உள்ள தூரம் கொஞ்சமல்லவே!!

அவர், ஜனாதிபதி. அவரது பெருமையை விளக்க, அலங்காரமான பவனி நடத்தப்படுகிறது! அழகான மாளிகை அளிக்கப்பட்டிருக்கிறது! ஆயிரமாயிரம் சம்பளம் வழங்கப்படுகிறது!

'ஏன் இவ்வளவு?' என்றால், 'பரந்த பூபாகத்தின் ஜனாதிபதியன்றோ?' என்று பதில் தரப்படுகிறது.

பெயருக்கும் புகழ்ச்சியாகக் காட்டிக்கொள்ளவும்தான பரந்தபூபாகம் போலும்!

பரிதவித்தால் அதைப்பற்றிச் சிந்திக்க—ஒரு சொல் வழங்க — நினைப்பு இராது, போலும்!!

இந்த சுயராஜ்யத்தையா, செப்பினர் தேசிய நண்பர்கள் — இன்பம் அரசோச்சும் என்று? எது, அரசோச்சுகிறது! இன்பமா? அல்ல! அல்ல!! — இந்தப் பெரிய பூபாகத்தைக் கட்டியாளுகிறோம் எனும் பெருமைதான், அரசோச்சுகிறது.

அதற்காகவே, டில்லிக் கொலு, நடத்தப்படுகிறது.

★

சுதந்திரோதயத்துக்குப் பின்......!

பூரிப்போடு, வெளியிடுகின்றனர் — புது 'ரிகார்டு' ஏற்படுத்திவிட்டார்களாம்!

சுதந்திரோதயத்துக்குப்பின் தொடர்ந்தாற்போல் இந்த ஆண்டில் அவ்வளவு மிச்சமாம்!!

கடந்த ஆண்டு நிர்வாகத்தை விளக்கி இந்திய ரயில்வே இலாகா, இவ்வளவு பூரிப்புடன் செய்தி தருகிறது, நமக்கு.

மொத்த வருயானம் ரூ 290.82 கோடியாம்.

செலவுபோக மிச்சம் ரூ. 28.34 கோடியாம்.

இதையே 'புது ரிகார்டு' என்று கூறுகிறது, ரயில்வே நிர்வாகம். சுதந்திரோதயத்துக்குப்பின்னராம்!

வருமானமும், மீதமும் அதிகரித்திருப்பது சரி — ஆனால், இந்த 'அதிகத் தொகை' எங்கிருந்து கிடைத்தது? அந்தரத்திலிருந்து கொட்டியதா! அல்லது அனுமார் உபாசனையால் வந்ததா!! அல்ல; அல்ல. நாம் கொட்டிக் கொடுத்தது. நம்மைச் சுரண்டிச் சென்ற தொகை இது.

டிக்கட் கட்டணத்தை உயர்த்தி, கொள்ளையடித்துச் சென்ற, ரூபாய்கள்தான், இத்தனை கோடியும்.

புது ரிகார்டாம்! ஆனால், அந்த 'ரிகார்டு'வின் பெருமையைப் பேசிக்கொண்டு, ரயில்வண்டிகளின் பக்கம் சென்றால், 'சுதந்திரோதயத்தின்' மணம், வீசும்!

மக்களின் தலையிலடித்து, அவர்களுக்கு எவ்வித வசதியும் செய்து தராது, சேமித்துத் தொகையைக் காட்டி, 'சிறது' பாடுகின்றது, ரயில்வே நிர்வாகம்.

ஆனால், அந்த ரயில்வே நிர்வாகத்தின் வண்டிகளைப் பார்த்தால், அவர்களின் 'சாதனை,' நாற்றமடிக்கிறது! கூட்டம்—குப்பை—இடநெருக்கடி—மக்களின் கூக்குரல். இதில் எது குறைந்திருக்கிறது! — இல்லையே! எதில் என்ன 'சுதந்திரோதய' பெருமையோ, தெரியவில்லை, நமக்கு!!

★

அணையும் ஜோதி!

அணையும் ஜோதி சுடர்விட்டு எரியும்! — என்று செங்கற்பட்டிலே பேசிய ஆச்சாரியார் வெளியிட்டாராம். ஆச்சரியப்பட்டேன், நான்! ஆச்சாரியார்—தள்ளாத வயதினர்—இதனை எடுத்துரைக்கின்றார், என்பதால்.

நாடி தளர்ந்து, நரை மூத்து, நாக்குழறும் பக்குவமெய்தியோர் வீட்டுத் திண்ணையிலமர்ந்து, 'சின்னஞ்சிறு வயதில் சிங்காரமாக வாழ்ந்தேன்!' என்று பேரன்மார்களுக்குச் சொல்வர். வில் பூட்டிய வண்டி வைத்திருந்தேன்—சலங்கைச் சப்தம் 'ஜல் ஜல்' என்று கிளம்ப மாடுகள் பாயும்—கண்டோர் மருள்வர்—எதிர்த்தோர் தப்பமாட்டார்கள்—இவ்விதம் தளர்ந்த குரலில், பழைய கால அந்தஸ்தைச் சொல்லும் அந்தக் காட்சி பரிதாபமாக இருக்கும்! சில 'கிழவர்'கள், நமக்கேற்படும் பரிதாபத்தை, நகைச்சுவையாகவும் மாற்றி விட்டுவிடுவார்கள், தமது பேச்சின்மூலம். நான் வைத்திருந்த வில் வண்டியாகுமா—அதோ அவன் காரில் போகிறானே—கார் என்ன ஓசத்தியோ?—என்று காரில் தன் காதலியோடு செல்பவனைப் பார்த்துப் பொருமிடும் கிழவர்களும் உண்டு.

நகைப்புக்குரிய இந்தக் 'கிழவர் குழாம்' ராஜநடை போட ஆரம்பித்தால் என்ன ஆகும்? ஆனால், நமது துர்ப்பாக்கியம், நாடி தளர்ந்தோரும்—தாடி மீசை நரைத்தோரும், அரசபீடத்தில் அமர்ந்துகொண்டு நல்லதை ஒழிக்கும் 'நற்கைங்கர்யங்களில்' ஈடுபடத் துவங்கியிருக்கிறார்கள். எதிரிலே செல்லும் வாலிபனைக் கேலி செய்வதோடு, அந்தக் கிழவர்குழாம் இருப்பதில்லை! சபிக்கவும் செய்கிறார்கள்!!

இல்லையென்றால், உதயஜோதிகள் உலவும் அரசியல் கட்சிகளை 'அணையும் ஜோதி' யென்று மதிப்பிடுவார் ஆச்சாரியார்? காங்கிரசைத் தவிர்த்து ஏனைய கட்சிகளெல்லாம் அணையும் ஜோதிகளாம்! அதனால் தான் கும்மாளமடிக்கின்றனவாம்—'பொதுமக்களே — அவைகளின் மயக்க வலையில் வீழ்ந்துவிடாதீர்' என்கிறார், ஆச்சாரியார்.

ஆச்சாரியார் ஒரு கிழவர்! அது மட்டுமல்ல, அவர் இருக்கும் அரசியல் ஸ்தாபனமும் வயது முதிர்ந்தது.

ஆனால், அவரோ—மற்ற எதிர்க் கட்சிகளை 'அணையும் ஜோதி' என்றார்.

இளமை இரத்தம் பீறிட, வாலிப முறுக்கோடு காளைகள் பலர் உலவும் முற்போக்குக் கட்சிகள், அணையும் ஜோதிகளாம்! நரை முதிர்ந்து, கோலேந்தி நடக்கும், 'கோமான்களின்' கட்சி, உதயஜோதியாம்!!—திருச்செங்கோட்டுத் 'தாத்தா' செப்புகிறார், இதனை.

புதுமணக் கோலத்தோடு, பூரிப்புத்தரும் வகையில்பவனிவரும்மணமகளைக்கண்டு, வழியில்போவோன் கூட வாழ்த்துவான். ஆனால், இந்த 'வயோதிகர்' சபிக்கிறார்! 'இது அணையும் ஜோதி!' என்று, வர்ணிக்கிறார்.

காடு வா! வா!! என்றழைக்க,வீடு போ! போ!! என்று கூறும் கட்டத்திலிருப்போர், துள்ளித் திரியும் இளைஞர்களைப்பார்த்து, 'நீங்களெல்லாம் சாகப்போகிறவர்கள்! ஜல்தியில் செத்துவிடுவீர்கள்!' என்று வர்ணிப்பது? நாத்தழும்பேறியவனும், சொல்லான்! ஆனால் இந்த 'நல்லவர்' ஆசீர்வதிக்கிறார் இவ்விதம்!!

இந்த அளவுக்குக் கெடுமதி யேற்பட்டமைக்குக் காரணம், எதிர்க்கட்சிகள், இவரது போக்கைக் கண்டிப்பதுதான். ராஜதர்பாரில், எங்கிருந்தோ வந்து ஒட்டிக்கொண்ட இவரை, பூமாலை எடுத்துப்போற்ற வேண்டும்போலும்! பழைய சம்பிரதாயங்களுக்காகப் பாடுபடும் இந்த விருத்தாப்பியருக்கு, சாமரம் வீச வேண்டும்போலும்!! துதிபாடி, வட்டமிட்டு, 'ஜே! ஜே!' போட்டால் வாழ்த்தியிருப்பார், நம்மை; இந்த 'மயானச் சொல்லை' வீசியிருக்க மாட்டார்.

சுலபமான காரியமும்கூட அது; ஆனால், இந்நாட்டு வாலிபப்படை எஃகுள்ளம் கொண்டதே தவிர, இடுடபொடிந்ததல்லவே. துப்பாக்கிகள் துளைத்தாலும், துரைத்தனத்தாரின் தடியடி தாக்கினாலும், 144 பாய்ந்தாலும், பயப்படாத — சண்டமாருதம் எனத் துள்ளித்திரியும் உள்ளங்கொண்டதாயிற்றே! 'அணையும் ஜோதி' யென்று, ஆரூடம் கணிக்கிறார்.

இந்த ஆரூடத்தை வேறு எவராவது கணித்தால், விசனப்படவும், சிந்திக்கவும் செய்யலாம். முற்போக்குக் கட்சிகள் குறித்து, இவ்விதம் ஆரூடம் கணிப்போரெல்லாம், முதுகு கூனல் விழுந்தவர்களாகவா இருக்கவேண்டும்? சங்கராச்சாரியார் சல்லடம் கட்டுவதும், சனாதனிகள் போர் முழக்கம் செய்வதும், 'நாமக்கல்' பக்தர் சங்காதம் ஊதி நிற்பதும், நகைச்சுவைக்குரிய காட்சிகள்! இந்த விசித்திரப் 'போர்ப்படைகளை'க் கண்டு, அஞ்சிவிடுவோம் நாம், என்று ஆரூடம் கணிக்கிறார், அன்பர் முதலமைச்சர். அந்த ஆசையில் நம்மை, 'அணையும் ஜோதி' என்று வர்ணிக்கிறார்.

ஆச்சாரியார்மட்டுமல்ல, அவர் போல ஆதிக்கப்பிடியை இழக்க விரும்பாத அரசோச்சிகள் பலரும், இவ்விதம்தான் கணித்தாரென்று சரிதம் சொல்கிறது. கணித்தோர், கடைசியில் சிதறி ஓடியதையும் வரலாறு கூறுகிறது. அந்த வரலாற்றுப் பட்டியலில் தமது பெயரையும் பொறித்துக்கொள்ளும், அவசரம், ஆச்சாரியாருக்கு வந்ததைக் கண்டு பரிதாபப்படுகிறோம்—நாம்.

எண்ணெயில்லாத ஜோதி, அணையும்! இது, உண்மை. இப்போதிருக்கும் முற்போக்குக் கட்சிகளில், எது, அணையக்கூடியது? எது, கொள்கையில்லாதது? — இந்திய அரசியல் வானில் சுடர்விடும் அரசியல் கட்சிகளில், முற்போக்குக் கட்சிகளே முன்னணியில் நிற்கின்றன. காரணம், தன்னை எரியவிடும், கொள்கை எனும் எண்ணெய் வேண்டிய அளவு இருப்பதால். அந்த எண்ணெய் வற்றிவிடக்கூடியதென்று, அந்தகனும், கூறான்! ஆச்சாரியார் மட்டும் கூறுகிறார்!!

எத்தனைபேருடைய இரத்தமும், சதையும், அந்த ஜோதிக்குத் தத்தம் செய்யப்பட்டு வருகிறது?—அதனால்தானே, அந்த ஜோதி, எரிகிறது! அழகான தங்கவிளக்கு இல்லாமலிருக்கலாம் — எண்ணெய் ஊற்றும் பூமான்களும் சீமான்களும் இல்லாமலிருக்கலாம் — 'எரியும் ஜோதியைப்பாரீர்' என்று படம் போட்டெழுதும் பத்திரிகைகளின் பலம் இல்லாமலிருக்கலாம், அதனால் அது அணையும் ஜோதியாமோ?

வீணாசைப்படுகிறார், 'வியாசர் விருது' அளிப்பவர்! ஜாருக்கும், ஹிட்லருக்கும் ஏற்பட்ட ஆசை—இவருக்கும் உண்டாகிறது. அமெரிக்காவுக்கு உண்டாகும் சபலம், ஆச்சாரியாருக்கும் ஏற்படுகிறது.

இரத்தத்தை எண்ணெயாக ஊற்றி, குவிந்த எலும்புக்கூடுகளை அகல்போலஆக்கி, கட்சி ஜோதியை விளக்கும் முற்போக்குக் கொள்கைகளை அணையும் ஜோதிக்கு ஒப்பிடுகிறார்—சீமான்களின் கைலாகிலும், பண முதலைகள் தரும் காணிக்கையிலும் கட்சித் தேரினை ஓட்டிக்கொண்டிருக்கும், கலர்க் கண்ணாடியார். அந்த உல்லாசப் போதையின் விளைவால், எது அணையும் ஜோதி என்று தெரிந்துகொள்ளும் சக்தியையும் இழந்துவிட்டிருக்கிறார்—வாலிபர்கள் திரண்டுநிற்கும் முற்போக்குக் கட்சிகளை 'அணையும் ஜோதி' யென்று கூறி, ஆனந்தமடைகிறார்.

ஆனால், அவரது பிரதம சீடரொருவர் என்ன கூறுகிறார் தெரியுமோ? — "காங்கிரஸ் கட்சி அணைந்து வருகிறது!" என்று செப்புகிறார், மதுரை வைத்யநாதய்யர். ஊழல்மலிந்துவிட்டதாம்—உருப்படாதாம் — மோசம் அதிகரித்துவிட்டதாம், காங்கிரசில்.

மோகனம் பாடுகிறார், குருநாதர்! முகாரி எழுப்புகிறார், முக்கியசீடர்!!

மதுரை வைத்தியநாதர், ஆச்சாரியாரின் 'அன்பு'க்காக, காங்கிரசில் பிடித்துவைக்கப்பட்டிருப்பவர் அவர், அறிவிக்கிறார் இவ்விதம். ஆனால், அன்பர் ஆச்சாரியாரோ, காங்கிரசைத்தவிர வேறெந்தக் கட்சியும் நிலையானதல்ல என்று செப்புகிறார். அடிதடி—அவர்களுக்குள்ளாகவே. ஆனால், ஆத்திரம், நம்மீது காட்டப்படுகிறது!

வளர்ந்துவரும் முற்போக்குக் கொள்கைகளை, ஆதிக்கக் காரர்கள், என்றுமே வரவேற்றது கிடையாது —'ஆரூடம்' கணிக்காமலும் இருந்தது, கிடையாது.

"சின்னஞ்சிறுவர்கள்! ஏதோ, ஆட்டம் போடுகின்றன."

"எத்தனை நாட்களுக்கு இவர்களின் கட்சி? பார்க்கலாம்!"

"ஐயயோ! கொலைகாரர்கள் — சுயநலவாதிகள்—சூதர்கள்"

"ஏதேதோ செய்கிறார்கள், இளைஞர்கள். ஐயோ, பாவம் மன்னித்துவிடுங்கள்!"

இப்படித்தான், வாலிபர்களின் இயக்கங்களுக்கு, 'வயோதிகக் கொள்கை'யினரால் வரவேற்பு வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, நல்லுரை ஒரு நாளும் வழங்கப்பட்டதில்லை. ஆகவே, ஆச்சாரியார் வீசும், வார்த்தை முற்போக்குக் கட்சியின் காலில்விழும் தூசாகத்தான் போகுமே தவிர, எதுவும் செய்யாது.

உதயஜோதியை, ஊத்தை கூச்சல் அணைத்துவிடாது! வார்த்தை வீச்சுகளால், பல மிக்க கோட்டை சிதறிவிடாது!!

வார்த்தைகளைப் பீரங்கிகளாகக் கருதும் கட்டத்துக்கு வந்திருக்கிறார், வயோதிக அமைச்சர்.

இந்தக் கட்டத்துக்கு அவர் இழுத்துவரப் பட்டிருப்பது காண வளரும் இயக்கம் மகிழத்தான் செய்யும்—வருந்தாது.

அணையும் ஜோதியின் காவலர் அவர்! உதய ஜோதியை எள்ளி நகையாடுகிறார்!!—பாவம், வந்தான் காலம். கண் பழுதடைந்த பருவம். வார்த்தைகளைக் குண்டு வீச்சாக்கி, அதிலாவது ஆனந்தம்கண்டு கொண்டிருக்கட்டும். அனுமதிப்போம்!

★

கலைக் கண்காட்சி

14, 15 தேதிகளில் மேட்டுப் பாளையத்தில் நடைபெறும் கோவை மாவட்ட மாநாடுகளை யொட்டி, ஓவியக் காட்சியும் நடைபெறுமென அறியவருகிறோம்.

சென்னை மாநில மாநாட்டில், பல்லாயிரக்கணக்கான மக்கள் மேற்படி ஓவியங்களைக் கண்டு மகிழ்ந்தனர். அந்த வாய்ப்பு, இப்போது கோவை மாவட்ட மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

மாவட்ட மாநாடுகளுக்குப் பின்னரும், மேற்படி ஓவியங்களை—கோவை மாவட்டத்தின் முக்கிய பகுதிகளுக்குக் கொண்டு சென்று நடத்தவேண்டுமெனக் கோவை மாவட்டக் கழகத்தார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஓவியக் காட்சி—நமது பிரச்சார வகைகளில் ஒரு புது முறையாகும்.

மிகுந்த பிரயாசையுடன் தயாரிக்கப்பட்ட அறிவு விளக்க ஓவியங்களை, மக்கள் மன்றம் கண்டு, புதுமைகளை உணரவேண்டும். இந்தப் பணியில், தமக்கேற்பட்ட சிரமத்தையும் பொருட்படுத்தாது, கோவை மாவட்டத்தினர் முன்வந்துள்ளனர். அதன் விளைவாக, நல்லதோர் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது, கோவை மாவட்ட மக்களுக்கு.

கழகத் தோழர்கள், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வார்களாக.

8—2—53ல் தோழர் குமார தணிகாசலம் துணைவிக்கு ஓர் பெண்மகவு பிறந்து தாயும் சேயும் நலம்.

நடைபெற்றவை

மன்னார்குடி: 1—2–53 ஞாயிறு மாலை ப. நாராயணசாமி தலைமையில் இரா. நெடுஞ்செழியன் 'தற்கால அரசியல் நிலை' என்னும் பொருள்பற்றிப் பேசினார்.

மாயவரம்: 2–2–53 மாலை நகர்ப் பூங்காவில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கே. அருணாசலம் தலைமையில் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றினார்.

திசையின்விளை: 2—2–53 மாலை தி.மு.க. சார்பாக எஸ். செல்லையா தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இரா. சு. தங்கப் பழம், எஸ். நடராசன், எஸ். இராம சுந்தரம் ஆகியோர் பேசினர்.

புதிய நாடகம்!

தஞ்சை ராமநாதன் செட்டியார் ஹாலில்

21—2—53 சனி இரவு 10-மணிக்கு

அண்ணாதுரை தலைமையில்

மு. கருணாநிதி, சிவாஜி கணேசன்

நடிக்கும்

பரப்பிரம்மம்

கதை, வசனம் மு. கருணாநிதி

(ஒரே நாடகம்)

காலஞ்சென்ற திருவாரூர் டி. என். ராமன் குடும்ப உதவி நிதிக்காக

டிக்கட் விபரம் ரூ. 5—0—0, 3—0—0, 1—8—0, 0—12—0

காலை 10-மணி முதல் தியேட்டரில் டிக்கட் கிடைக்கும்

நிகழ்ச்சிச் சித்திரம்

காதல் பலி

ஞானசம்பந்தன்

"அழகிய கடற்கரையை அணைந்தோடுகின்ற அலைகடலின் முன்னே சொல்லுகிறேன். என் அன்பு அழியாதது. உண்மை ஒன்றுண்டு; உரைத்திடுவேன் அதையும். எனக்கு, முன்பே ஒரு காதலி உண்டு. நீ இரண்டாம் காதலி"

"ஆ........"

"ஆமாம். கன்னித் தமிழ்—கன்னற்றமிழ்—நான் கற்ற கருத்து மிகு கற்கண்டுத் தமிழ்—என் கள்ளக் காதலி. நீ என் சொந்தக் காதலி"

"ஊம்...பேச்சிலே சமர்த்தர் தான்"

"என் சமர்த்தெல்லாம், உன் சரசப் பார்வையின்முன்னே, சரிந்த கோட்டையாகிறது. சல்லாப மானே! சற்றுக்கருணை காட்டேன்"

*

கடற்கரையைஅடுத்துஒருசோலை. சோலையிலே சோர்வைப் போக்கிக் கொள்ளவந்த ஒரு கட்டிளங் காளையும், அழகி நல்லாள் ஒருத்தியும், சொந்தம் கொண்டாடினர், இந்தச் சொகுசு வார்த்தைகளால். அவள் 'அத்தான்' எனக் கூறி, அவனை அணைத்தாள்.

*

"வண்ணப் புதுமலரே! வடித்தெடுத்த கன்னற்றமிழ்ச் சுவையே! வனப்புக் கன்னத்தைக் காட்டி என் வாட்டத்தைப் போக்கிடு"

"ஊஹூம்"

"நிமிர்த்திய விழிகளை நிலத்தில் ஏன் நிறுத்துகிறாய்? சோபைமிகு சொர்ண விக்ரகமே! சோகமேன்? சொல்லவந்ததைச் சொல்லேன்"

"சொல்லட்டுமா, அத்தான்?"

"இன்னுமா கேள்விநிலையிலேயே இருக்கிறாய்? சிவந்த உன் முகம் என் சிந்தையைக் கிளறுகிறது. அகன்ற உன் கண்கள், என் ஆர்வத்தை அதிகமாக்குகின்றன. கோமளமே, கொட்டேன், செய்தியை"

"கோபிக்கமாட்டீரே, அத்தான்"

"கொஞ்சும் இதழ் கொட்டும் வார்த்தைகள் கோபத்தைக் கூடக் கூட்டி வருமோ? கூச்சம் வேண்டாம்; கூறிடு, பெண்ணே!"

"தோழி ஒருத்திக்குச் சொன்னேன். தேள் கொட்டியதுபோலத் துடித்தாள், விஷயமறிந்ததும். அதனால்தான், உங்கட்கது மகிழ்வைத் தருமோ அல்லது..."

"மருட்சியைக் கொடுக்குமோ என்று மயங்குகிறாயோ? மனங்கவர்ந்த மங்கையர் திலகமே உனக்கு மகிழ்ச்சி, எனக்கு மருட்சி இரண்டையும் ஒருங்கே தரவல்ல செய்தி, உலகில் உண்டோ ஏதேனும்? ஏன் மன ஊசலாட்டம்? உரைத்திடு, சடுதியில்"

"உண்மையைச் சொல்லட்டுமா"

"அப்படியானால், பொய் பேசவா இந்நேரம் என் அனுமதியை வேண்டினாய்?"!

"இல்லை, அத்தான்...வந்து..."

"ஐயோ......எத்தனை வெட்கம். சொல், தேன்மொழி"

"வந்து...மூன்..று... மாதங்களாயிற்று"

"என்னது, மூன்று மாதங்களாயிற்று?"

"வெட்கம் ஏன் என்கிறீர்கள்; சுகமாய்ச் சொன்னால் புரிந்து கொள்ளாமல்"

"வெட்கம் என்ன வேண்டிக்கிடக்கிறது, நமக்குள்ளே; வெளிப்படையாகத்தான் சொல்லேன்..."

"நமது அன்பின் அறிகுறி என் அடிவயிற்றில் வளரத் தொடங்கி மூன்று மாதங்களாயிற்று அத்தான், மூன்று மாதங்களாயிற்று.."

"என் முழுமதியே! முன்பே இதைச் சொல்லியிருக்கக்கூடாதா? முத்துத் தொட்டிலில்லாவிட்டாலும் ஒரு மூங்கில் தொட்டிலேனும் முயன்று கொண்டு வந்திருப்பேனே"

"கேலிக்குக் குறைவில்லை. இதற்குத்தான் நான் முன்பே சொல்ல மறுத்தது"

"நீ முயன்றாலும் எத்தனை நாளைக்கு இதை மூடிவைக்க முடியும்"

"வேடிக்கை கிடக்கட்டும் அத்தான்..."

"ஆமாம், தேன்மொழி. இனி வாழ்வு நமக்கொரு விளையாட்டு அல்ல. உன்னை நான் உடனடியாக மணம் செய்துகொள்ளவேண்டும்"

"அப்பாவிடம் நேராக வந்து என்னைக் கொடுக்கும்படி கேளுங்களேன்"

"கண்டிப்பாக மறுப்பார். அவர் மனதிலே எத்தனை திட்டங்கள் போட்டுக்கொண்டுள்ளாரோ? 'மன்னார்சாமி' வேறு, உனக்காக வேண்டி, உன் அப்பாவின் மனதை மயக்கிவிட்டிருக்கிறான், தன் மாடி வீட்டைக் காட்டி"

"பின், வேறு வழி அத்தான். நமது அன்பினுக்கொரு அரண் அமைக்கவேண்டுமே!"

"ஆமாம், தேன்மொழி. அதைத்தான் நானும் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன், பல நாட்களாக"

*

"அத்தான், என்ன இவ்வளவு நேரங்கழித்து வருகிறீர்கள், இன்று?"

"எல்லாம் நம்காரியமாகத்தான் போயிருந்தேன்,..."

"அத்தான், அம்மாவுக்கு வேறு தெரிந்து விட்டது..."

"என்னது...?"

"என்னதா? என்வயிறு வளர்வதுதான். நான் எவ்வளவோ மறைத்துப் பார்த்தேன். எனக்கொன்றுமே தெரியாது என்று திரித்துக் கூடக் கூறினேன். அவள் திட்டத் தொடங்கி விட்டாள். அகப்பட்டதை எடுத்து அடிக்க வந்தாள்..."

"ஐய்யோ...முடிவில்..."

"மறைக்க முடியவில்லை. முடிந்தாலும், எத்தனை நாளைக்கு? முடிவாக உண்மையைச் சொல்லிவிட்டேன். உறுமினாள்—பொருமினாள்—உலக்கையைத் தூக்கி வந்தாள் உதைக்க—யாரடி அந்தத் தறுதலை? என்றாள். உண்மையைக் கூறவேண்டியதாயிற்று."

"என்ன...?"

"காரணகர்த்தா தாங்கள்தான் என்பதைச் சொல்லிவிட்டேன்..."

"சொல்லிவிட்டாயா? பூரித்துப் போயிருப்பாளே,என்மாமியார்..."

"சரிதான்...புதிதாக ஏதும் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் 'பூசை' இன்னும் கொடுக்க வந்திருப்பாள்".

"இப்பொழுது என்ன செய்யலாம்..."

"என்னைக் கேட்கிறீர்களே, அத்தான். நீங்கள் சொல்லுகிறபடி நான்......அயலூர் சென்றிடுவோமே..."

"ஊம்....தேன்மொழி....உலகை இன்னும் தெரிந்து கொள்ளவில்லை நீ. தேடித்திரியும் போது இன்பம் கண்களுக்கே தெரியாது. வறுமையிலே வாடுகின்ற நான் வேற்றூரிலே உன் வயிற்றையுங் காயப் போட வேண்டியது தான்..."

"வறுமையிலும் நாம் சேர்ந்திருந்தால், வாழ்வு சுவைக்கத்தான் செய்யும் அத்தான்."

"நம்மைச் சமூகம் வாழவிடாது பெண்ணே, முதலில்- அவனியின்எந்தப் பகுதியில் நாம் இருந்தாலும், நம்வாழ்வைக் குலைக்க, வந்திடுவார் உன்அப்பா. நீ வீடுபோ, தேன்மொழி, சிந்தித்துச் செய்வோம் எதையும். வாழ்ந்தால் 'காதல்' வாழ்வு. அன்றேல், சொல்லியிருக்கிறார் ஒருவர், 'சாதல்' நன்றென்று. அதோ பார். உன்னையும் என்னையும் சேர்த்து வைத்த கிணறு. நல்லவேளையாக எனக்கும் 'நீச்சல்' தெரியாது. கவலைப்படாதே கண்ணே; காலம் எதையும் நிர்ணயித்து விடும்..."

*

"தேம்புவதேன், தேன்மொழி?"

"தென்றலுக்குத் தீம்பு எண்ணுகிறார்கள்."

'தெளிவாகச் சொல்"

"நமது பிணைப்பைத் தீய்க்கப் பார்க்கிறார்கள்."

"யார் அந்தத் தீய நினைப்பினர்...?"

"பெற்றெடுத்த 'எமன்கள்' தான் அத்தான்..."

"ஆ..."

"ஆம், அத்தான். நாளை மறுதினம் 'மணம்' அத்தான். 'நமக்கல்ல' 'எனக்கு' மாளிகை வீட்டு மன்னார்சாமிமணமகன். மாதா,பிதா செய்த மணவேற்பாடு அத்தான் இது. எனக்கே இன்றுதான் தெரியும்..."

"உண்மையாகவா...?"

"அத்தான்...இதுபோன்ற செய்திகளை ஆட்டக்காயாக்கிக்கொண்டா அத்தான் விளையாடுவேன்...?"

"நீ என்ன பதில் சொன்னாய்?"

"நல்ல கேள்வி அத்தான். எனது எண்ணத்தைக் கேட்பார் யாரங்கே! பெண்ணைப் புண்ணாகத்தான் கருதுகிறார்களே ஒழிய கண்ணாகக் கருதி அவரின் கருத்தைக் கேட்கிறார்களா...? காலம் மாற வேண்டும் அத்தான்..."

"நாளை இதேநேரத்துக்கு இங்கே வா, தேன்மொழி. இரண்டிலொன்று தீர்மானித்திடுவோம்."

*

"அத்தான்..."

"சட்...காலைவிடு, காதகி. நேற்றே 'வா' வென்று சொல்லியிருந்தேன். வந்தாயா? வாழத் திட்டம் போட்டிருந்தேன். வராது நின்று திட்டத்தைக் குலைத்து விட்டாயே. அதிகாலையிலே மாடிவீட்டுக்காரனை மணந்து கொண்ட பெருமையைச் சொல்லிவிட்டுப் போக, அர்த்தராத்திரியிலே வந்தாயா?"

"அத்தான்.........நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? நேற்று வரவில்லை அத்தான், கட்டுப்பாட்டின் காரணமாக. இன்று வந்தேன், கடைசி முறையாக உங்களைக் கண்டு போக—உங்கள் அன்பு முகத்தைப் பார்த்து, அகங்குளிர—ஆர்வம் அடங்க, ஒரு முறை 'அத்தான்' என்று அழைத்துவிட்டுப் போக—வந்தேன்"

"புருஷன் வீடு போகப் போகிறாயா?"

"அத்தான் இந்த பூவுலகைவிட்டு புதுவுலகம் போகப்போகிறேன், அத்தான். இனி நான் யாருக்காக வாழவேண்டும்"

"என்ன?"

"அத்தான்......நீங்கள் மட்டுமே சுவைத்துக் களித்த இந்த அதரங்களை—அத்தான் எப்படிச் சொல்வேன், அத்தான் — மன்னார்சாமி, என்னைத் தான்மணந்து கொண்டோமே என்ற மமதையில், என் மனதைப்பற்றி கவலைகொள்ளாமல் என கற்பை—அத்தான், எப்படிச் சொல்வேன்—சூறையாடிவிட்டாரே"

"ஆ...இதைச் சொல்லவா வந்தாய் இங்கே?"

"இல்லை, அத்தான். இதோ போகிறேன் அத்தான். நான் வருகிறேன். மறக்காதீர் அத்தான். உங்கட்காகவே வாழ்ந்து, உங்களையன்றி வேறெவரையும் எண்ணாது, எண்ணத்தில் களங்கமில்லாதவள் இருந்தாள் — என்பதை மறவாதீர் அத்தான். வருகிறேன்..."

"தேன்மொழி,நில்,என்னபைத்தியக்காரத்தனமாய் ஓடுகிறாய். நில். அங்கேதானே கிணறு இருக்கிறது. ......"

"தெரிந்துதான் அத்தான் போகிறேன்"

"ஆ......"

விழுந்தாள்; விழுந்தான், தொடர்ந்து கிணற்றிலே.

*

ஐயோ...வேண்டாமே. வீணாகச் சாவதா? வேண்டாம்......அலறிப்புடைத்துக் கொண்டு எழுந்தேன். என்ன?! அத்தனையும் கனவா? இல்லை, இல்லை.

கடந்த 4-ந்தேதி 'மெயில்' ஆங்கில தினசரி இதழ் என் மார்பின்மீது தவழ்ந்துகொண்டிருந்தது. எடுத்தேன், நான்காவது பக்கத்தில் முதல் பத்தியின் கோடியைக் கவனித்தேன்.

'கிணற்றிலே பிணங்கள்;திருவாங்கூரிலே' தலைப்பிது.

"இரண்டு பிணங்கள்; இளவாலிபனுடையதொன்று; மணமான மங்கையினுடையது மற்றொன்று. கிணற்றிலே காணப்பட்டது,கடந்த மாதம் 31ந்தேதி,"

அந்தப் பெண், இளைஞன்மீது 'காதல்' கொண்டிருந்ததாகவும், அவளின் மனதை அறியாது பெற்றோர் அவளை வேறொருவனுக்கு மணமுடித்துக் கொடுத்திட்டதாகவும் தெரிகிறது. இதன் காரணமாகத் தற்கொலை" என்ற பொருள் படும்படி, வந்திருக்கிறது செய்தி.

மேற்கொண்டு படித்தேன். நெஞ்சு கொதிக்கின்ற செயல் மற்றொன்று, தொடர் கதையாகச் சென்றுகொண்டிருந்தது.

திருவாங்கூரிலே, கடற்கரையை அடுத்து, மராமத்திலாகா அலுவலகத்தை அண்டியுள்ள கிணற்றில் இரண்டு பிணங்கள் — வாலிபன்—மங்கை — இவர்களின் உருவிலே, கிடைத்ததாம்.

நெஞ்சு கொதிக்கிறது, இந்த நிலையைக்கண்டு, நமக்கு. எப்படியெப்படியெல்லாம் வாழத்திட்டம்போட்டனரோ?

கொஞ்சிப் பேசி, குலாவி மகிழ்ந்திருக்க எண்ணியிருப்பர். 'வேண்டாம், நமக்கிந்த வஞ்சக உலகு என்று வெறுத்துச் சென்றுவிட்டனர்.

காதல், கற்பனையிலும்கதையிலும் தான் போலிருக்கிறது; காண்கிற உலகில் இல்லைபோலும்; சுவைத்துப்படிக்கத்தான் காதல்—சுகவாழ்வுக்கில்லைப்போலும்!

கருத்தைக் கவர்ந்தவனின் கரத்தைப்பற்றிக் கண்ணியவாழ்வுநடாத்திய கன்னித் தமிழ்நாட்டிலா — இந்த கண்ணீர் பெருகும் செயல், என்று கேட்கத் தோன்றுகிறது, நமக்கு. பேசுமாற்றல் இருந்தால், பேசியிருக்குமே அந்தப் பிணங்கள் கூட இப்படி?

இந்த நிகழ்ச்சி, பகுத்தறிவுப் பணி நாட்டுக்கின்னும் எந்த அளவுக்குத் தேவைப்படுகின்றது என்பதையே காட்டுகிறது!

★

ஆ அளிக்கும் ஐந்து!

பசுவையும், அது தரும் ஐம்பெரும் பொருள்களையும்பற்றி மதநூலார் கூறுவதுபற்றிய ஒரு சிறு விளக்கம் இங்கு தரப்படுகிறது:—

"மிகவுந் தூயதாய்எல்லாத்தேவர்களும் தன்கண் அமையப்பெற்றதென்று சிவதருமோத்தரத்திற் பாராட்டப்பட்டதாய்ச் சிவபெருமானுக்குப் பால்—தயிர்—நெய்—நீர்—சாணகம் என்னும் ஐந்தினைக் கொடுப்பது பசு" என்று மதநூலார் கூறுகின்றனர்.

இதில், தேவர் எனப்படுவார் யாவர் என்று எடுத்துக்காட்டவில்லையாயினும், வேதங்களிற் பேசப்படும் முப்பத்து முக்கோடி தேவர்களையே குறிப்பிடுவதாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்றால், தமிழ்நாட்டில் தேவர்கள் என்ற ஒரு பிரிவினர் இருப்பதாகக் கொள்வதற்குக்கருவியாதுமில்லை. தமிழ் நாட்டிலுள்ள கள்ளர்—மறவர்—அகம்படியர் என்ற பிரிவினருட் சிலர் தங்களைத் 'தேவர்' என்று சொல்லிக்கொள்கின்றனர். ஆனால், அவர்கள் எவரும் பசுமாட்டைத் தங்கள் குடியிருக்கும் வீடாகப் பயன்படுத்தாமல், மற்றை மக்களைப்போலவே அவர்களும் நிலத்தின்மீது வீடுகள் அமைத்து அவற்றிலேயே குடியிருக்கிறார்கள். ஆதலால், தேவர்கள் ஆரியர் நூல்களிற் காணப்படும் தேவர்களையே என்பது பெறப்படும். படவே, அச்சொல்லப்பட்ட தேவர்கள் இச்சொல்லப்பட்ட பசுவில் எந்தமுறையிற் குடி கொண்டுள்ளார்கள் என்பது தெரியவில்லை.

முப்பத்து முக்கோடி தேவர்கள் எல்லாரும் ஒரு பசுவின் உடம்பில் இடம்பெற்றுள்ளனரா? அல்லது பகுதி பதியாகப் பிரிந்து ஆசியா—ஐரோப்பா—அமெரிக்கா முதல் இந்நிலவுலகிலுள்ள பசுக்கள் எல்லாவற்றிலும் இடம்பெற்றுள்ளனரா? அன்றித் தனித் தனி ஒவ்வொரு பசுவிலும் இத்தனை இத்தனை தேவர் விழுக்காடு இடம் பெற்றுள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளதா? இங்ஙனம் பசுவின் உடம்பில் குடியிருக்குந் தேவர்கள், எந்த முறையில் அதன்கண் வாழ்கின்றனர்? அவர்களுக்கு உணவு எப்படிக் கிடைக்கிறது? அவர்களின் படுக்கையறை முதலியன எந்த முறையில் பசுக்களின் உடம்பில் அமைந்துள்ளன? என்பனபோன்ற ஐயப்பாடுகள் எம்மால் தெளிந்தறியுமாறில்லை. இவற்றை அக்கதையை நம்புவர்களே விளக்குதல் நலம்.

இனிப், பசுவின் பால் தயிர் நெய் நீர் சாணகம் என்னும் ஐந்துஞ் சிவனுக்குப் பயன்படுவது என்பது எப்படி ஒப்புக் கொள்வது? கோயில்களிற் காணப்படுஞ் சிவவடிவம், கல் செம்பு முதலியவற்றால் அமைக்கப்பெற்ற வடிவங்களேயாதலால், அவை, அவற்றை சாப்பிடுகின்றன என்று சொல்லுதற்கில்லை. ஒருவேளை சிவனை வழிபடும் அடியவர்களின் அன்பு வலையிற் சிக்கிய பால் முதலான பொருட்களைச் சாப்பிடும் வடிவத்தை உடையவனாகி, அவற்றைச் சாப்பிட்டு அடியவர்களை மகிழ்விக்கிறான் சிவன் என்று வைத்துக்கொண்டாலும், பால் தயிர் நெய் என்னும் மூன்றையுஞ் சாப்பிடுவனேயன்றிச், சிறுநீரை (மூத்திரத்தை)யுஞ் சாணியையும், அடியவர்கள் எவ்வளவு அன்பு காட்டிக் கொடுத்தாலும் அவற்றைச் சாப்பிடுவானா? அல்லது சாப்பிடத்தான் முடியுமா? அன்றி அங்ஙனஞ் சாப்பிடும்படி வற்புறுத்துவது சில அடியவர்களின் அன்புடைமைக்குத்தான் ஏற்றதாகுமா? என்பனவற்றை நம்பவர் எண்ணிப் பார்த்தல் வேண்டுமன்றோ! அற்றன்று, கடவுள் அவற்றை உட்கொள்வதில்லை; அவை அவருக்குக் குளிப்பாட்டுதற் (அபிஷேகத்திற்)குத்தான் பயன்படுகின்றன என்று சிறிது மதிப்பாகச் சொன்னாலுங் கூடச், சாணியுஞ் சிறுநீரும் அங்ஙனம் குளிப்பதற்குப் பயன்படும் பொருள்கள் அல்லவே. ஆனால், இப்போதுள்ள கோயிற் பூசாரிகள் கோயில்களில் இருக்கும் கடவுளரின் வடிவங்களாகிய செம்பின் மீதும் கல்லின் மீதும் பால் தயிர் நெய் முதலான பொருள்களைப் பெய்து, அவை யாருக்கும் பயன்படாமற் சாக்கடையிற் போய் விழுந்து முடைநாற்றம் வீசுவதையே காண்கிறோம். சில பூசாரிகள், கடவுளின் சிலைக்குப் பின்னால் ஏதாவதொரு ஏனத்தை முன்னதாகவே வைத்து அச்சிலைகளின்மீது ஊற்றப்படும் பால் முதலியன அந்த ஏனத்தில் விழும்படி செய்து, அவற்றைத் தம்வீட்டுக்குப் பிறர் அறியாதபடி எடுத்துச் சென்று தங்கள் தேவைக்குப்பயன்படுத்துவதும், சிற்றுண்டி நிலையங்களுக்கு விற்றுப் பணந்திரட்டுவதுமான முறைகளைக் கையாளுகின்றார்கள். அன்றியும், கடவுளின்முழுக்கு (அபிஷேக)ப் பொருள்களாகிய பால் தயிர் நெய் சிறுநீர் சாணகம் என்னும் ஐந்து பொருள்களிலும் பால் தயிர் நெய் ஆகிய மூன்று பொருள்களைமட்டுமே கோயிற் பூசாரிகள் பெரிதும் விரும்புகின்றார்கள் என்பதும், சிறுநீர் சாணிஆகிய இரண்டையும் பூசாரிகள் விரும்புவதில்லை என்பதும் அவர்களால் நடத்தப்படும் முழுக்கு (அபிஷேக) நிகழ்ச்சிகளால் நாம் அடிக்கடி அறிகின்றோம். கடவுளுக்கு உகந்த பொருள்களாகிய ஐந்தில் முதல் மூன்றைமட்டும் மிகுதியாகப் பயன்படுத்த விரும்புவதும், சிறுநீரையுஞ் சாணியையும் முற்றிலும் வெறுப்பதும் ஏன் என்று பால் தயிர் நெய் முதலியவற்றைக் குடங் குடமாகக் கொட்டிப் பாழாக்கக் கொடுக்கும் அடியார் குழாங்களாவது அப் பூசாரிகளைக் கேட்பதில்லை.

இனி, ஒரு சாரார், பசுவின் கழிபொருள்களாகிய சிறுநீருஞ் சாணியும் கடவுளுக்கு உகந்த பொருள்களல்ல வென்றும், அங்ஙனஞ் செய்வது ஆரியர் கொள்கை என்றும், பசுவின் பால் தயிர் நெய் வெண்ணெய் மோர் ஆகிய ஐந்துமே கடவுளுக்கு உகந்த பொருள்கள் என்றும், இங்ஙனஞ் செய்வதே தமிழர் கொள்கை யென்றும் கூறிக் கடவுளுக்கும் அவரை வழிபடுந் தமிழ் மக்களுக்கும் உயர்வு தேட முயலுகின்றனர். இது எப்படியிருக்கிறதென்றால், 'அவன் கெட்டான் குடிகாரன், எனக்குப் போடு பூப்போட்ட கோப்பையிலே இரண்டு' என்று சொல்லுவது போலவே இருக்கிறது. ஏனென்றால், ஆரியர்கள் பால் தயிர் நெய் ஆகிய மூன்றையுமே கல்லினுஞ் செம்பினுங் கொட்டிப் பாழாக்குகின்றார்கள் என்று எண்ணி, அதிற் சீர்திருத்தம் காண வந்த தமிழறிஞர், சிறிதளவு எஞ்சியுள்ள வெண்ணெயையும் மோரையுங் கொண்டு போய்க் கல்லினுஞ் செம்பினுங் கொட்டிப், பசுவுக்குத் தீனிபோட்டு வளர்த்த மக்கள் அவற்றை அருந்த விடாமல் தடுத்து, 'உறவடித்த சோறு காடிப் பானையில் விழுந்தது' போலப் பசுவிலிருந்து பெறக்கூடிய ஐந்தனையுமே மக்கள் தமக்குப் பயன்படுத்திக்கொள்ள விடாமல், அவற்றை எல்லாம் பாழாக்குவதிலேயே தம் ஆராய்ச்சியைப் பயன்படுத்தியுள்ளார். இயற்கைக்கும் தமிழர் கொள்கைக்கும் மாறாகக் கடவுள் வடிவம் முதலியனவற்றைத் தம் பிழைப்புக்காகக் கற்பித்த ஆரியர்களின் சூழ்ச்சியை மெய்யென நம்பி அக்கொள்கையைத் தழுவியதுமன்றி, அதிற் சீர்திருத்தங் காண முயன்று தமக்குத் தாமே கேடு தேடிக்கொண்ட தமிழறிஞரின் போக்கைக்கண்டு, நாம் இரங்குவதை விட வேறென்ன செய்ய முடியும்! எனவே, பால் தயிர் நெய் சிறுநீர் சாணகம் என்னும் ஐந்து பொருள்களும் கடவுளுக்குப் பயன்படுவன என்ற ஆரியர் கூற்றும், சாணியுஞ் சிறுநீரும் கழிபொருள்களென நீக்கி மோரும் வெண்ணெயுஞ் சேர்த்துக் கொள்ளுதலே முறையாம் என்ற தமிழறிஞரின் கூற்றும் அறிவுக்குப் பொருந்தாதென்பது இதுகாறும் கூறியதுகொண்டு தெளியப்படும். என்க.

மலேயா தரும் 'பாடம்'

இரத்தபாசத்துக்கு ஈடு எதுவும் இல்லை! — என்று சொல்வார்கள். அண்ணன் தம்பிகள், இன்று சண்டை போட்டுக் கொண்டாலும், ஆபத்து வரும் நேரத்தில் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். ஆனால், அந்நியன் நிலை வேறு! அவனோடு கூடிக் குலாவி, 'நீயும் நானும் அண்ணன் தம்பிகள்' என்று ஆயிரமுறை அணைத்துக் கொண்டாலும், அவன் ஆபத்தில் உதவ மாட்டான்! அடித்து விரட்டவும் தவற மாட்டான்!!

இந்த உண்மையை நாம் சொன்னால்,ஏற்பதில்லை—நம்மவரில், சிலர். அவர்களது பார்வைக்கு, சில வார்த்தைகள். இவை, மலேயாவிலுள்ள நம்மவரது நிலையை விளக்கும்.'மலேயாவில் வாழ்வோர் இந்தியர்'— என்று, ஒரே வார்த்தையில், அரசாங்க அறிக்கைகளும் செய்திகளும் வெளியிடுகின்றன. அங்கே வாழும், எல்லோரும் 'இந்தியர்' என்ற சொல்லிட்டே அழைக்கப்படுகின்றனர். ஆனால் 'அந்தப் பெயரால்' லாபம் பெறும்கூட்டம், நம்மவரைக் கீழாக மதிக்கிறதாம்! 'கருவேப்பிலை' யாகக் கருதுகிறதாம்!

*

"நூற்றுக்கு எண்பத்தைந்து பேராயுள்ள தமிழர் இல்லையென்றால், 'இந்தியர்' இல்லை; இந்தியர் என்ற பெயருக்கே இந்நாட்டில் மதிப்பேற்படமுடியாது. ஆனால், இந்தியருக்கு என்று அமைந்திருக்கின்றஸ்தாபனங்கள் தமிழரைமதிப்பதில்லை. தமிழர்களை ஏணிப் படியாக உபயோகப்படுத்திக்கொண்டு, எட்டி உதைக்கிறார்கள்"

—வை. திருநாவுக்கரசு

*

"இந்தியர் என்றழைக்கப்படுவோரில், ஏனைய சமூகத்தார். தமிழரை மதிப்பதே இல்லை. தமிழர்களமீது குதிரைச்சவாரி செய்கின்றனர்"

—கதிரேசன்

*

"இந்தியாவின் மற்ற பகுதிகளில் பூகம்பமும் வெள்ளமும் சேதமேற்படுத்தியபொழுது தமிழர்கள் நிதி சேர்த்துத் தந்தனர். ஆனால்இன்று தமிழகம் புயலால் அவதிப்படும்போது 'இந்தியர்' என்ற பெயரால் அமைந்திருக்கிற சங்கங்கள் நம்மை அலட்சியம் செய்கின்றனவே!"

—பகவதி

*

"தமிழர்கள், கருவேப்பிலையாகக் கருதப்படுகிறார்கள். நம்மவரின் நலன் குறித்து அவர்கள் கவலைப்படுவதேயில்லை. நாம், இவ்விதம் இருப்பது சரியல்ல இனி, அவர்களுக்கு பயன்படக்கூடாது.

—கோ. சாரங்கபாணி

*

சிங்கப்பூரில் 2-ந்தேதி நடைபெற்ற கூட்டமொன்றில், சிதறிய மணிகள இவை. 'தமிழர் நலத்தைப் புறக்கணிக்கும் இந்தியர் ஸ்தாபனங்களில் எவரும் இருக்கக் கூடாது' என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

கடல்கடந்து சென்ற இடத்திலும் வடவர், தம் ஓரவஞ்சனையைக் காட்டத்தவறவில்லை! நம்மவரோ, தமக்கே இயல்பான பண்புடன், அன்னவரை ஆதரிக்கத் தவறினாரில்லை. அவ்விதம் ஆதரித்ததற்குப் பலன், ஏமாற்றம்.

ஆகவே, ஒன்றுகூடி, இத்தகைய முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

'எங்கும் இந்திய மயம் வீசுது!,' என்று சுக்களிக்கும் மாற்றுக் கட்சிச் சகோதரர்களே, மலேயாவைப் பாருங்கள்! மானத்தைப் பறிக்கிறார்கள் வடவர்! 'இந்தியர்' எனும் சொல் தூசாக்கப்படுகிறது.

★

வ. உ. சி. இளைஞர் கழகம்
சேத்துப்பட்டு

நான்காம் ஆண்டு விழா

21—2—53 சனி மாலை 6 மணிக்கு.
பச்சையப்பன் கல்லூரிப்பெருவெளியில்
நடைபெறும்.

தலைவர்: தோழியர்.
சத்தியவாணிமுத்து அம்மையார்,

பேச்சாளர்கள்:
ஏ. கே. வேலன், கண்ணதாசன்
பொருள்: வ. உ. சியும், அரசியலும்.

வ. உ. சி
இலவச இரவுப் பள்ளி நிதிக்காக
கலைவாணர்.
என். எஸ் கிருஷ்ணன்,
கலைவாணி.
டி. ஏ. மதுரம் நடிக்கும்

"இழந்த காதல்"

சென்னை
ஒற்றைவாடை தியேட்டரில்
22-2-53 ஞாயிறு மாலை 6மணிக்கு
நடைபெறும்.

தலைவர்:
இரா நெடுஞ்செழியன் அவர்கள்.
கட்டணம்- ரூ. 5, 3, 2, 1, அணு 8.

கைத்தறிப்பாடல் : : ஒரு அறிவிப்பு

ஜனவரி 4-கைத்தறி செலவாளர் ஆதரவு நாளை யொட்டி, உடுமலை நாராயணக்கவி அவர்கள் தீட்டித் தந்த "செந்தமிழ் நாட்டுக் கைத்தறி வேட்டிகள்—சேலைகள், வாங்குவீர்!" என்கிற பாடலை, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கெனத் தந்துள்ளார். மேற்படி பாடலை, இசைத் தட்டுக்கோ, திரைப்படத்துக்கோ பயன்படுத்த விரும்புவோரும் அதன் பகுதியையோ வரிகளையோ கையாள விரும்புவோரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தின் அனுமதியைப் பெறவேண்டியது அவசியமாகும்.

பொறுப்பாளர்
தி. மு. க. தலைமை கழகம்

1-ம் பக்க தொடர்ச்சி

ஐரோப்பாவில்...

கடந்த உலகப்போரின் விளைவால், ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் ஐரோப்பாவில் அடங்கவில்லை. எனினும், கம்யூனிசக் கொள்கையின் வளர்ச்சி குறித்தும், கடந்த உலகப் போரின் முடிவில், பல 'காலனி'களை இழந்த நாடுகள், மீண்டும் அவைகள் கிட்டாதா? என்ற பேராசையுடன் இருந்து வருகின்றன. இந்தப் பேராசையின் விளைவாக, ஆசியநாடுகளில் மீண்டும் தமது ஆதிக்கத்தைச் செலுத்தக் கனவு காண்கின்றன. இந்த ஆசை, 'நித்திய கண்டம் பூரணயுசாக' வாழும், பிரான்சுக்கு அதிகமாகயிருக்கிறது! இந்தோசீனவில் வளர்ந்து வரும் புரட்சி அலைகளை அடக்குவதில், அது விசேஷ அக்கரை செலுத்துகிறது. பிரான்சுக்கு, 'கிருஸ்துவ மதத்தின் மூத்த புதல்வி' என்ற பட்டப் பெயரும் உண்டல்லவா? ஆகவே, கம்யூனிஸ்டுகளை ஒழிப்பதில், அதிகக் கவனம் செலுத்துகிறது.

வல்லரசுகளில் ஒன்றான, பிரிட்டனுக்கு, இழந்த இந்தியாவைப் பெறும் பேராசை யில்லாவிடினும்—மலேயாத் தீவுகளில் வளர்ந்துவரும் புரட்சிக் கனலை அடக்கிட ஆசையுண்டு. ஆனால், கடந்த போரிலேற்பட்ட அதிர்ச்சி இன்னும் அடங்கிய பாடில்லை!

முக்கியமான வல்லரசுகளின் நிலை, இது. இவைகளுக்குப் பொதுவுடைமையை ஒழிப்பதில் ஆசையும் ஆர்வமும் அதிகம். இது சரியான சந்தர்ப்பமல்லவென்றே கருதுகின்றன.

இந்த நேரத்தில் ஐசன், போர் முரசு தட்டுகிறார்.

அமெரிக்காவின் பொம்மையான ஜப்பான், சீனாவின் பரம்பரை எதிரி. அதுவும், ஐசனின், அறிவிப்பு கேட்டு அதிர்ச்சியடைந்திருக்கிறது.

தவிர்க்கமுடியுமா?

இந்த நிலையைத் தவிர்ப்பது என்பது, சாத்தியமல்ல. எத்தனை நாட்களுக்குத்தான், இரண்டு சக்திகளும் மோதாமலிருக்க முடியும்? உலகில் ஆதிக்க மனோபாவம் உலர்ந்து சருகானாலன்றி, போர் மனோபாவம், ஏற்படத்தான் செய்யும். கொரியாவில் தனக்கேற்பட்ட அவமானத்தைத் துடைத்துக் கொள்ளும் நடவடிக்கையாக, அமெரிக்கா, கருதுகிறது. ஆனால், அகில உலகையும் கதிகலங்கவைக்கிறது! இந்த பிரச்னையில் தனது 'சகாக்களின்' ஒத்துழைப்பையும் பெற அமெரிக்க தூதர்கள் பவனி வருகின்றனர்!!

அக்கிரமம்

ஐசனின் போக்கு, அக்கிரமம் நிரம்பியதாகும். அணுக் குண்டுகளைப்பற்றிய கதைகள் நம்மைத் திடுக்கிடச் செய்துவரும் இந்தக் காலத்தில் இத்தகைய போர், மூண்டால் கோடானு கோடி மக்களின் சாபக்குரல் கிளம்பத்தான் செய்யும்! போர் மூள்வது—பணமூட்டைகளுக்கு லாபம்தான். இதனால், இந்திய உபகண்டத்திலிருக்கும், அமெரிக்காவின் 'செல்லப்பிள்ளைகள்' கம்யூனிச நாடுகளுடன் மோதச்செய்ய முயல்வார்கள். அந்த முயற்சிக்கு, 'கம்யூனிச எதிரி' என்று வாய் வீரம் பேசிடும், டில்லிபீடத்தார்; ஆதரவு கொடுத்தால், நம் கதி—அதோ கதிதான்!

தீ, மூட்டப்படுகிறது! ஆசியாவின் மத்தியிலே!! இதனைப் பரவவிடாமற் செய்ய, உலக அரசியல் வாதிகள் ஒன்று சேரவேண்டும். சமாதான முழக்கங்கள் அதிகரித்துவிட்ட இந்த நாட்களிலே, இதற்காகத் தம்மை அர்ப்பணிக்கும்அறிஞர்கள் ஏராளமாக இருப்பார்கள். அவர்களைத் திரட்டி, அவர்கள் மூலம், மக்கள் மன்றத்தில் போரின் கொடுமைகளை விளக்கச் செய்ய வேண்டும்.

போர் நடத்துவது—முதலாளித்துவத்துக்கோர், பொழுதுபோக்கு!

பொதுமக்களுக்கு, அது உயிரின் வாதை!!

மக்களின் நலன் கருதா, மதோன்மத்தர்களின் போக்கால், மூன்றுவது உலகப்போர் மூளும் அறிகுறி காட்சியளிக்கிறது. அந்தோ! என்ன அஞ்சுகிறோம்.

—

திருத்தம்

புயல் நிவாரண நிதி நன்கொடையில் ஆர். டி. அரசு மூலம் ரூ. 625—0—0 என்பதை சென்னை 24-வது வட்ட தி. மு. க. தோழர்கள் மூலம் வசூல் 558—9—9ம் லக்ஷிமி டாக்கீஸ் தோழர்கள்மூலம் 66—6—6-ம் வசூலாயிற்று. ஆக 24-வதுவட்ட தோழர்கள்கொடுத்த தொகை 625—0—3 புயல் நிவாரணத்துக்கு என த்திருத்திக்கொள்ளவும்.

★

திருமணம்

22-2-53 ஞாயிறுகாலை 9—மணி அளவில் சென்னை திருவல்லிக்கேணி ஐ ரோடு 325, என்னுள்ள இல்லத்தில் அண்ணதுரை, தலைமையில் வி. ஆர் திருநாவுக்கரசு, B A., (c/o Reserve Bank of India, Madras 4.) ஆர். கமலா திருமணம் நடைபெறும். தோழர்கள் அன்பழகன், M. A., மதியழகன். B. A., ஏ. கே. வேலன் ஆகியோர்பேசுவர்.

முகவரி மாற்றம்

இரா. நெடுஞ்செழியன்,
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி, சென்னை 1.

மேட்டுப்பாளையம் நோக்கி வாரீர்!

கோவை மாவட்ட

இரண்டாவது
சமூக சீர்திருத்த மாநாடு
தலைவர்: **மு. கருணாநிதி**
திறப்பாளர்: **சி. பி. சிற்றரசு**
கலைக்கண்காட்சித் திறப்பாளர்: **அருண்மொழி**
14-2-53 சனிக்கிழமை

இரண்டாவது
மாவட்ட தி. மு. க. மாநாடு
தலைவர்: **இரா. நெடுஞ்செழியன்**
திறப்பாளர்: **கி. மனோகரன்**
15-2-53 ஞாயிற்றுக்கிழமை

தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை கலந்துகொள்வார்.

கோவை மாவட்டம் - மேட்டுப்பாளையத்தில்
பாண்டியன் பந்தலில், கனகராசன் அரங்கில் மாநாடுகள் நடைபெறும்.

கே. ஏ. மதியழகன், க. அன்பழகன், இரெ. இளம்வழுதி, என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். எஸ். இளங்கோ, சத்தியவாணிமுத்து, கண்ணதாசன், கோபி-ராசு, தாமரைச்செல்வன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இசை:- நாகூர் அனீபா, சேலம் சீனிவாசன், கோவை முத்துசாமி.

★

ஓவியக் கண்காட்சியும் உண்டு.

——இரு நாடக விருந்துகள்——

சி. என். ஏ., நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, மு. கருணாநிதி முதலியோர் பங்கேற்கும்

சனி இரவு
காதல் ஜோதி
[சி. என். ஏ. தீட்டியது]

ஞாயிறு இரவு
சந்திரோதயம்
[சி. என். ஏ. தீட்டியது]

கட்டணம்:— வ. கு. மு. ரூ. 5, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1, பெண்கள் அணா 8.

ஈ. வி. கே. சம்பத், வ. கு. தலைவர்.
கே. எஸ். வாசன், பொருளாளர்.
வி. சண்முகநாதன், எஸ். ஏ. இராஜமாணிக்கம், செயலாளர்கள்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.